நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆலங்குளம்

முன்னிலை : திருமதி.S. ஆனந்தவல்லி, பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர், ஆலங்குளம்

2024 ஆம் வருடம் மே திங்கள் 30 ஆம் நாள் வியாழக்கிழமை

**குற்றப்பல்வகை மனு எண். 3108/2024**

**CNR No.. TNTL1C- 003727-2024**

தினேஷ், ( 2 வது எதிரி)
த/பெ. ஜான்சன் ....... மனுதாரர் / எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்
வீ.கேபுதூர் காவல்நிலையம்,
குற்ற எண். 46/2024
பிரிவுகள் 448, 323, 324, 427, 506(ii) IPC ....... எதிர்மனுதார்/ கு ற்றமுறையீட்டாளர்-

இந்த மனு இறுதியாக 30.05.2024 ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/ எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.R.S. உமாபதி, B.Sc., B.L., அவர்கள் தன்னுடைய மனுவையும், பிரமாண வாக்கு மூலத்தையும் எழுத்து மூலமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில் இருந்தும், காவல் உதவி ஆய்வாளர் எழுத்து மூலமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில் இருந்தும், வழக்கு கோப்புகளை பார்வையிட்டும் 30.05.2024 இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு,**

மனுதாரர்/ எதிரி நிபந்தனையை வீ.கேபுதூர் காவல்நிலையத்திலிருந்து வீரபாண்டி காவல்நிலையத்தில் கையொப்பமிட மாற்றி அமைக்க கோரி இந்த மனு குவிமுச பிரிவு 437 ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

மனுதாரர் /எதிரி இந்நீதிமன்ற crmp No. 2979/2024 date 20.05.2024 ம் தேதி சமூகம் நீதிமன்ற உத்தரவுபடி ஜாமினில் சென்றுள்ளார். மேற்படி எதிரி சமூகம் நீதிமன்ற உத்தரவு படி வீ.கேபுதூர் காவல்நிலையத்தில் 22.05.2024 தேதி முதல் இன்று வரை கையொப்பம் செய்து வருகிறார். அதே போல மேற்படி எதிரி திருப்பூரில் கார்மெண்ட்ஸ் தொழில் செய்து வருவதால் சமூக நீதிமன்ற உத்தரவை கடைபிடிக்க முடியவில்லை என்றும், தினமும் கையெழுத்து செய்து வருவதால் தொழிலை சரியாக கவனிக்க முடியவில்லை என்றும், எதிரி வீ.கேபுதூர் காவல் நிலையத்தில் இருந்து திருப்பூர் வீரபாண்டி

காவல்நிலையத்தில் கையொப்பம் செய்து வர உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் கூற்று**

எதிரியானவர் வீ.கேபுதூர் காவல் நிலையத்தில் 23.05.2024 தேதி முதல் 29.05.2024 தேதி வரை 7 நாட்கள் காலை 10.00 மணிக்கு ஆஜர் ஆகி கையொப்பமிட்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

**தீர்வு**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர் /எதிரி வீ.கேபுதூர் காவல் நிலையத்தில் 23.05.2024 தேதி முதல் 29.05.2024 தேதி வரை 7 நாட்கள் காலை 10.00 மணிக்கு ஆஜராகி கையெழுத்து செய்து வருகிறார் என்பது தெரிய வருகிறது. மேற்படி எதிரி திருப்பூரில் கார்மெண்ட்ஸ் தொழில் செய்து வருகிறார் என்பதற்கு அவருடைய ஓட்டுனர் உரிமம் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்ட்டுள்ளது. வீ.கேபுதூர் காவல் நிலையத்தில் தினமும் கையெழுத்து செய்து வருவதால் மனுதாரின் தொழில் பாதிக்கப்படுகிறது என வாதிடப்பட்டது. மனுதார் திருப்பூரில் வசித்து வருகிறார் என்பது ஆவணம் மூலம் தெரிய வருகிறது. 7 நாட்கள் மனுதார் கையெழுத்து செய்துள்ளார். மனுதாரர் / எதிரி வீகேபுதூர் காவல்நிலையத்திலிருந்து திருப்பூர் வீரபாண்டி காவல்நிலையத்தில் மீதமுள்ள நாட்களுக்கு கையெழுத்து செய்ய நிபந்தனையை மாற்றி அமைக்க கேட்டுள்ள இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின் இன்று 2024 ஆம் வருடம் மே திங்கள் 30 ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

( ஓம். S. ஆனந்தவல்லி)

நீதித்துறை நடுவர்,

ஆலங்குளம்.

மாற்றி